1995 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 157, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

157—

மண்டகப்பட்டு அரசு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

36505*—திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விழுப்புரம்--இராமசாமி படையாச்சியார் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், மண்டகப்பட்டு கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண்டகப்பட்டு கிராமத்திலுள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மேம்படுத்துவதற்கு கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு வந்துள்ளது. இதை மேல் மட்டக் குழு பரிசீலனைக்கு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லை என்று பொன்னான ஆட்சி நடத்திவரும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் எதைக் கேட்டாலும் வழங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 1995-96-ஆம் கல்வி ஆண்டில் தமிழகத்தில் 40 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்கி உள்ள காரணத்தினால் எங்கள் பள்ளிக்கு 1995-96-ஆம் கல்வி ஆண்டிலேயே, நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக்கிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

[1995 மார்ச் 29

முற்பகல் 11-05

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தப்படுகின்றன. மண்டகப்பட்டு நடுநிலைப் பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டர் சுற்றளவில் தொடக்கப் பள்ளிகள் ஐந்தும், நடுநிலைப் பள்ளிகள் மூன்றும், உயர்நிலைப் பள்ளி ஒன்றும், மேல்நிலைப் பள்ளி ஒன்றும் அமைந்து இருக்கின்றன. இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் அளவில், போதுமான இட வசதியும், தளவாடங்களும், விளையாட்டு இட வசதியும் இல்லை என்று குறிப்புரையிலே தெரிவித்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு மேல்மட்டக் குழு இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 158, திரு. எஸ். அண்ணாமலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

158—

பாலாற்றுப் படுகையில் ஜெனரேட்டர்கள் பொருத்துதல்

*9962—**திரு. எஸ். அண்ணாமலை:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) ஆலந்தூர்-பல்லாவரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் வரும் பாலாற்றுக் குடிநீரைத் தொடர்ந்து பெற பாலாற்றுப் படுகையில் ஜெனரேட்டர்கள் பொருத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம் செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆலந்தூர்-பல்லாவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பாலாற்று படுகையில் ஜெனரேட்டர்கள் பொருத்தும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.